# பழங்குடியினரை ஆவணப்படுத்தல்
**2023**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | பழங்குடியினரை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2023/0003 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஒரு வருடம் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | NCFP Foundation |
| முக்கிய பங்குதாரர்கள் | Staff and Volunteers of Noolaham Foundation |
| செயற்றிட்டச் செலவுகள் | LKR 2,413.700 .00 |

## நூலக நிறுவனம் பற்றிய அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது. மேலும் நூலக நிறுவனத்தினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள மொத்த ஆவணங்களின் எண்ணிக்கை இன்று 150,000 இனைக் கடந்து சாதனை படைத்திருக்கிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து

ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

பூர்வகுடிகள் ஆவணப்படுத்தலில் இலங்கையின் கிழக்கு மாகாணக் கரையோரப் பிராந்தியங்களில் வாழ்கின்ற தமிழ் மொழியினைப் பேசிக்கொண்டு இருக்கும் "கரையோர வேடர்" சமூகத்தினரின் பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள், கலை கலாசாரக் கூறுகள், சமூகக் கட்டமைப்புக்கள், தொழில் மற்றும் இதர வாழ்வாதார முறைகள், சமூக அமைப்புக்கள், வழிபாட்டு மையங்கள், இயற்கையோடிணைந்த வாழ்க்கை முறைகள், கலையாற்றுகைகள், மருத்துவ நடைமுறைகள், சடங்கார்ந்த நிகழ்வுகள், ஆளுமைகள் மற்றும் அவர் தம் உரிமை இழப்புக்கள் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்தி அனைவரோடும் பகிர்ந்து பழங்குடியினரின் எழுச்சிக்கு வலுவூட்டல் என்பது இந்தச் செயற்திட்டத்தின் தொலைநோக்கு ஆகும்.

மேலும் இதுவரை பழங்குடியினர் தொடர்பாக நாடெங்கிலும் பரந்துபட்ட ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் அவை ஒரு பகுதி சார்ந்ததாகவோ அல்லது ஒரு ஆய்வுக்கட்டுரையினை சமர்ப்பிப்பதர்காகவோ மேற்கொள்ளப்பட்டவையாகத்தான் காணப்படுகின்றன. ஆனால் நூலக நிறுவத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் பழங்குடியினரை ஆவணப்படுத்தல் செயற்றிட்டமானது பரந்துபட்ட வகையில் அவர்களிம் வாழ்க்கை முறையியல் , கலாசாரக்கூறுகள், சடங்குமுறைகள் மற்றும் அவர்களது உரிமைகள் என அனைத்து விடயங்களையும் ஆவணப்படுத்தக் கூடியதாகும். அந்த வகையில் இச்செயற்திட்டம் ஊடாக இலங்கைத் தமிழ் பேசும் பழங்குடியினர் சமூகங்களின் எழுத்து, படம், ஒலி, ஒளி ஆகிய சகல மூலங்களிலும் ஆவணங்களை ஆவணப்படுத்தப்படும்.

## செயற்றிட்ட நோக்கம்

நாட்டின் உண்மையான ஆதிக்குடிகளையும் அவர்தம் பண்பாட்டுக்கூறுகளையும் அறிதல். அவர்தம் செயற்பாடுகளுக்கு மதிப்பளித்து இடமளித்தல். வெளிக்கொணரப்படாமல் இருக்கின்ற பூர்வ குடிகளின் மரபுகளையும் பண்பாட்டு அசைவுகளையும் அவர்களின் அனுமதியுடன் எந்தவித மாற்றமும் இல்லாமல்

தற்காலத்திற்கு ஏற்றவாறு ஆவணப்படுத்துதல். அவர்தம் கலைகள், மரபு ரீதியான பின்பற்றுதல்கள், இயற்கையுடன் ஒன்றித்து தன்வயப்பட்ட வாழ்க்கை முறைகளை அறிதல். இலங்கைப் பரப்பில் மானுடவியல் மற்றும் நாட்டுப்புறவியல் கண்ணோட்டத்திற்கும், ஆய்வுப் பரப்பிற்கும் புதிய வழிகளையும் அணுகுமுறைகளையும் ஏற்படுத்தல் போன்றவற்றை பின்புலமாகக் கொண்டு இவ்வாய்வு முக்கியம் பெறுகிறது.

## அடைவு மட்டம்

| வகைப்பாடு | எண்ணிக்கை |
|---|---|
| ஆவணங்கள் | 21 |
| வாய்மொழி வரலாறு | 43 |
| ஆளுமைக்குறிப்பு | 43 |
| நிறுவனக்குறிப்பு | 16 |
| புகைப்படங்கள் | 62 |
| குறுங்கால ஆவணகம் | 20 |
| ஆவணகம் | 74 |
| வலைப்பூக்கள் | 136 |
| நிகழ்வுகள் | 5 |

## 1.சேகரிக்கப்பட்ட ஆவணங்கள்

பழங்குடியினரை ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் தொடர்பாக இதுவரை 22 ஆவணங்கள் இச்செயற்றிட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு 21 ஆவணங்கள் திறந்த அனுக்கத்திற்காக விடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இலங்கை பழங்குடிகள் ,

கடற்கரையோர பழங்குடிகள், பழங்குடிகளின் பூர்வீகம் மற்றும் வரலாறு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய ஆவணங்களாக காணப்படுகின்றன.

| ஆவணம் கொண்டிருக்கும் விடயம் | ஆவணத்தலைப்புகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| பழங்குடியினரின் வரலாறு மற்றும் பின்னணி | 1.இலங்கையில் பழங்குடிகள்<br>2.கடல் ஆதிவாசிகள் பழங்குடி சமூகம்<br>3.The Veddas<br>4.People of Sri Lanka<br>5.கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு<br>6.பண்டைய வரலாற்று அடிச்சுவடிகள்<br>7.Veddas -book | 7 |
| பழங்குடியினரின் தாய்மொழி மற்றும் உரிமைகள் | 1.OUR LAND YOUR LAWS<br>2.VeddaStudyFinal30July2011<br>3.The-Rights-Of-Indigenous-Peoples-In-Sri-Lanka<br>4.Sri lanka's independence<br>5.CBD Strategy and Action Plan - Sri Lanka (English version)<br>6.பழங்குடியின மக்களின் உரிமைகள் | 6 |
| பழங்குடியினர் வழிபாட்டுமுறை மற்றும் பண்பாடுகள் சார் வாழ்வியல் முறைகள் | 1.மட்டக்களப்பு வரலாறு- பூர்வகுடிகளும் குமார தெய்வ வழிபாடும்<br>2.மட்டக்களப்பு மக்கள் வாழ்வும் வாழ்க்கையும் | 5 |

| | | |
|---|---|---|
| | 3.களுவன்கேணி வேடுவப்பரம்பரையினரின் வழக்காறுகள் | |
| பழங்குடியினர்களின் மருத்துவ முறை | 1.Indigenous medicine<br>2.Annual_report_institute_of_indigenous_medicine_2010 | 2 |
| பழங்குடியினரின் விவசாயம் மற்றும் உணவுசார் அறிவு | 1.Report_no_229 | 1 |

[பழங்குடியினர் சார் ஆவணகங்கள்]

**2.**வாய்மொழி வரலாறு மற்றும் ஆளுமைக்குறிப்பு

பழங்குடியின சமூக மக்களை இனங்கண்டு அவர்களுடன் கலந்துரையாடி இயற்கைத்தன்மையுடன் வாய்மொழி வரலாறானது பதிவு செய்யப்படுகிறது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வாய்மொழி வரலாறானது பின்னர் எழுத்து வடிவில் ஆளுமைக்குறிப்பாக எழுதி ஆவணப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் பழங்குடி சமூகத்தில் அச்சமூக உரிமைகளுக்காக பேசும் நபர்கள் அச்சமூகம் சார்ந்து கல்வியினூடாக எடுத்துக்காட்டாக இருக்கும் நபர்கள் , அச்சமூகத்திற்காக குரல் கொடுப்பவர்கள் அவர்கள் சார்ந்து ஆய்வுக்கட்டுரைகள், நூலகள் ஆகியவற்றை எழுதியவர்கள், அச்சமூகத்தவர்களில் வேட்டையாடுபவர்கள் , நோய் நீக்கிகள் முதலானவர்களிடமிருந்து வாய்மொழி வரலாறு பெறப்பட்டவர்களின் விபரத்தை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வாய்மொழி வரலாறு பெறப்பட்ட நபர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| கப்புறாளைமார் | 15 |
| மருத்துவம் சார்ந்தோர் | 2 |

| | |
|---|---|
| சமூக சேவையாளர் | 9 |
| பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் | 5 |
| கலைஞர்கள் | 7 |
| வேட்டையாளர்கள் | 5 |

**2.1** ஆளுமைகள் தொடர்பான விபரப்பட்டியல்

| வாய்மொழி வரலாறு பெறப்பட்ட நபர்கள் | வகை | இடம் |
|---|---|---|
| வெள்ளக்குட்டி கிருஸ்ணப்பிள்ளை | வேடக்கப்புறாளை (மதகுரு) | களுவன்கேணி , மட்டக்களப்பு |
| தங்கேஸ்வரன் விக்னேஸ்வரன் | கலைஞர் (ஓவியர்) | களுவன்கேணி , மட்டக்களப்பு |
| சண்முகம் | கலைஞர் | வந்தாறுமூலை மட்டக்களப்பு |
| மாணிக்கவேல் | கலைஞர் | களுவாங்சிக்குடி மட்டக்களப்பு |
| வரதன் | சமூக செயற்பாட்டாளர் | மூதூர் திருகோணமலை |
| கனகரெத்தினம் | சமூக செயற்பாட்டாளர் | மூதூர் திருகோணமலை |
| ஆறுமுகம் | வேடக்கப்புறாளை (மதகுரு) | மட்டக்களப்பு |

| | | |
|---|---|---|
| கிருஸ்ணகுமார் | வேடக்கப்புறாளை (மதகுரு) | செங்கலடி, மட்டக்களப்பு |
| சின்னையா | பேராசிரியர் | சீலாமுனை, மட்டக்களப்பு |
| லெட்சுமி | மருத்துவிச்சி வேடக்கப்புறாளை | களுவாங்சிக்குடி மட்டக்களப்பு |
| அருளானந்தம் | வேடக்கப்புறாளை (மதகுரு) | களுவன்கேணி , மட்டக்களப்பு |
| நாகராசா | வேடக்கப்புறாளை (மதகுரு) | களுவாங்சிக்குடி மட்டக்களப்பு |
| முத்துவேல் | வேடக்கப்புறாளை (மதகுரு) | களுவாங்சிக்குடி மட்டக்களப்பு |
| மாணிக்கவேல் | கலைஞர் | களுவாங்சிக்குடி மட்டக்களப்பு |
| விஜிதா | சமூக செயற்பாட்டாள | ஏறாவூர், மட்டக்களப்பு |
| ஜெயராணி | வேடக்கப்புறாளை (மதகுரு) | களுவாங்சிக்குடி மட்டக்களப்பு |
| பஞ்சாட்சரம் | தேன் வேட்டைக்காரர் | மாங்கேனி, ,மட்டக்களப்பு |
| வேலாயுதம் | கரையோர வேடர்களின் தலைவர் | மாங்கேனி, ,மட்டக்களப்பு |
| பூபாலரெத்தினம் | கலைஞர் | மாவடிப்பற்று, மட்டக்களப்பு |
| ஸ்ரீ செல்வம் | சமூக செயற்பாட்டாளர் | மூதூர், திருகோணமலை |

| | | |
|---|---|---|
| கனேசன் | சமூக செயற்பாட்டாள | கிரிமிச்சை,<br>மட்டக்களப்பு |
| சின்னத்தம்பி | வேடக்கப்புறாளை<br>(மதகுரு) | மாங்கேனி,<br>மட்டக்களப்பு |
| ஜெய்ஷங்கர் | பேராரிசியர் | திருபெருந்துறை,<br>மட்டக்களப்பு |
| விஜயரெட்ண | சமூகச்செயற்பாட்டாள<br>ர் | கிரான்,<br>மட்டக்களப்பு |
| வேலுப்பிள்ளை | வேடக்கப்புறாளை<br>(மதகுரு) | தளவாய்,<br>மட்டக்களப்பு |
| இன்பமோகன் | நுண்கலைத்துறைப்<br>பேராசிரியர் | குருக்கள்மடம்<br>மட்டக்களப்பு |
| சந்திரகுமார் | சிரேஸ்ட<br>விரிவுரையாளர்<br>நுண்கலைத்துறை | அம்பிலாந்துறை,<br>மட்டக்களப்பு |
| உமாகாந்தன் | சமூக<br>செயற்பாட்டாளர் | வெருகல்,<br>திருகோணமலை |
| விஸ்வநாதன் | சமூக<br>செயற்பாட்டாளர் | வெருகல்,<br>திருகோணமலை |
| மகேஸ்வரன் | வேடக்கப்புறாளை | வெருகல்,<br>திருகோணமலை |
| தெய்வேந்திரன் | வேடக்கப்புறாளை | வெருகல்,<br>திருகோணமலை |
| மயில்வாகனம் | வேட்டையர் | கரடியனாறு, மட்டக்களப்பு |
| சந்திரா | மருத்துவிச்சி | சேருவில -திருகோணமலை |

| | | |
|---|---|---|
| | | |
| நாகமணி | வேட மதகுரு | கரடியனாறு மட்டக்களப்பு |
| புஸ்பநாதன் | வேட மதகுரு (கப்புறாளை)\| | சேருவில , திருகோணமலை |
| நாகரெத்தினம் | வேட்டையர் | கரடியனாறு மட்டக்களப்பு |
| ராசமாணிக்கம் | தேன் வேட்டையர் \| | சேருவில , திருகோணமலை |
| உதயகுமார் | சமூக செயற்பாட்டாளர் | கதிரவெளி, மட்டக்களப்பு |
| சரசோதி | கலைஞர் | வெருகல், திருகோணமலை |
| கணபதிப்பிள்ளை | வேடக்கப்புறாளை | வெருகல், திருகோணமலை |
| கந்தசாமி | கலைஞர் | மூதூர் - திருகோணமலை |
| விஜயகுமார் | வேட்டையர் | சேருவில , திருகோணமலை |
| சண்முகம் | வேடக்கப்புறாளை | செங்கலடி, மட்டக்களப்பு |

வாய்மொழி வரலாறுகள்

ஆளுமைக்குறிப்புகள்

### 3. நிறுவன உள்ளீடுகள்

நிறுவன உள்ளீடுகள் என்பது பழங்குடியினர் சார்ந்து செயற்படும் சங்கங்கள் ,

சபைகள், அமைப்புகள் மற்றும் சடங்கு மையங்கள் ஆகியவை பற்றிய குறிப்புகள் பற்றிய ஆவணப்படுத்தலாகும்.

| நிறுவன உள்ளீடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| நலன்புரி அமைப்புகள் | 1 |
| அபிவிருத்தி சங்கங்கள் | 3 |
| சமூக அமைப்புக்கள் | 3 |
| சடங்கு மையங்கள் | 7 |
| சம்மேளனம் | 1 |
| ஆலய நிர்வாக சபைகள் | 1 |

### **3.2** நிறுவனங்கள் பற்றிய விபரப்பட்டியல்

| நிறுவனங்களின் பெயர் | வகை | அமைவிடம் |
|---|---|---|
| குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பு | நலன்புரி அமைப்பு | சந்தோசபுரம்- திருகோணமலை |
| சந்தோசபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் | அபிவிருத்திச் சங்கம் | சந்தோசபுரம்- திருகோணமலை |
| நல்லூர் கிராம அபிவிருத்திச் சங்கம் | அபிவிருத்திச் சங்கம் | நல்லூர்- திருகோணமலை |
| விடிவெள்ளி முதியோர் சங்கம் | சமூக அமைப்பு | களுவன்கேணி - மட்டக்களப்பு |
| பழைய மாணவர் சங்கம் - தளவாய் | சமூக அமைப்பு | தளவாய் - மட்டக்களப்பு |

| | | |
|---|---|---|
| குஞ்சன்குளம் -ஊற்றோடை விவசாய சம்மேளனம் | ம்மேளனம் | குஞ்சன்குளம் - மட்டக்களப்பு |
| வராகி அம்மன் நிர்வாக சபை-குஞ்சன்குளம் | நிர்வாக சபை | குஞ்சன்குளம் - மட்டக்களப்பு |
| குஞ்சன்குளம் நன்னீர் மீன்பிடி அமைப்பு | சமூக அமைப்பு | குஞ்சன்குளம் - மட்டக்களப்பு |
| குஞ்சன்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் | அபிவிருத்திச் சங்கம் | குஞ்சன்குளம் - மட்டக்களப்பு |
| பத்தினித் தெய்யோ(அம்மன்) வேடர் வழிபாட்டிடம் | சடங்கு மையங்கள் | களுவன்கேணி - மட்டக்களப்பு |
| குடா நீலி வேடர் வழிபாட்டிடம் | சடங்கு மையங்கள் | களுவன்கேணி - மட்டக்களப்பு |
| மோட்டுக்காட்டுத் தெய்வம் வேடர் வழிபாட்டிடம் | சடங்கு மையங்கள் | யக்குரே - மட்டக்களப்பு |
| கொம்பு நாச்சி தெய்வம் வேடர் வழிபாட்டிடம் | சடங்கு மையங்கள் | நெடியமடு - மட்டக்களப்பு |
| தெய்யநாச்சி வேடர் வழிபாட்டிடம் | சடங்கு மையங்கள் | சேனைக்கண்டம் - மட்டக்களப்பு |
| குமாரத்தன் சடங்கு மையம்-தளவாய் | சடங்கு மையங்கள் | தளவாய் - மட்டக்களப்பு |
| பத்தினித் தெய்யோ(அம்மன்) வேடர் வழிபாட்டிடம்\| | சடங்கு மையங்கள் | களுவன்கேணி - மட்டக்களப்பு |

[நிறுவன உள்ளீடுகள்]

**4.** புகைப்படங்கள்

புகைப்படங்கள் காலத்தோடு ஏற்படும் மாற்றங்களை அவதானிக்க மிகவும் அவசியமானவையாகும். அந்த வகையில் பழங்குடி மக்கள் சார் நிறுவனங்கள், அமைப்புக்கள் அவர்களது சடங்கு மையங்கள் , புழங்கு பொருட்கள் ஆகியவை

புகைப்படமாக்கப்பட்டு இச்செயற்றிட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

| புகைப்படங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| வழிபாட்டிடம் | 43 |
| சமூகம் சார் செயற்பாடுகள் | 9 |
| தொல்சமய கூறுகள் | 3 |
| நபர்கள் | 2 |
| புழங்கு பொருட்கள் | 6 |
| பந்தல் அமைப்புக்கள் | 4 |
| அமைப்பு ஆவணங்கள் | 1 |

ஒளிப்படங்கள்

**4.1** புகைப்படம் எடுக்கப்பட்ட இடங்களின் விபரங்கள்

| தலைப்பு | இடம் |
|---|---|
| களுவன்கேணியின் அமைந்துள்ள வேடர் வழிபாட்டிடம் ஒன்று | மட்டக்களப்பு- களுவன்கேணி |
| நல்லூர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் எழுத்தாவணங்கள். | திருகோணமலை- மூதூர்- நல்லூர். |
| வேடர் வழிபாட்டிடம்-02- தொல்சமயக்கூறுகள் | மட்டக்களப்பு- களுவன்கேணி |
| வேடர் வழிபாட்டிடம் 02- ஆரிய காலனித்துவத்தாக்கம். | மட்டக்களப்பு- களுவன்கேணி |

| தலைப்பு | இடம் |
|---|---|
| வேடர் வழிபாட்டிடம்-02- தொல்சமய மற்றும் பார்ப்பனியக் கூறுகள் | மட்டக்களப்பு-களுவன்கேணி |
| வேடர் வழிபாட்டிடம்-03 | மட்டக்களப்பு-களுவன்கேணி |
| வேடர் வழிபாட்டிடம்-03 - நோய் நீக்கல் செயற்பாடு | மட்டக்களப்பு-களுவன்கேணி-நெடியமடு |
| வேடர் வழிபாட்டிடம்-03 - குறிபார்த்தல் | மட்டக்களப்பு-களுவன்கேணி-நெடியமடு |
| வேடர் வழிபாட்டிடம்-03 - மரபு மீறாத வழிபாட்டமைப்பு | மட்டக்களப்பு-களுவன்கேணி-நெடியமடு |
| வேடர் வழிபாட்டிடம்-03 - நேர்த்தி கட்டல் | மட்டக்களப்பு-களுவன்கேணி-நெடியமடு |
| வேடர் வழிபாட்டிடம்-03 - வழிபாட்டுக்கான பயன்பாட்டுப் பொருட்கள் | மட்டக்களப்பு-களுவன்கேணி-நெடியமடு |
| வேடர் வழிபாட்டிடம்-03 - வழிபாட்டுக்கான உருவ அமைப்புக்கள் | மட்டக்களப்பு-களுவன்கேணி-நெடியமடு |
| வேடர் வழிபாட்டிடம்-03 - வழிபாட்டிட புறப்பகுதி | மட்டக்களப்பு-களுவன்கேணி-நெடியமடு |
| பழங்கால புழங்கு பொருட்கள் | மட்டக்களப்பு-களுவன்கேணி- |

| தலைப்பு | இடம் |
|---|---|
| | மாவடிப்பற்று |
| பழங்கால வெண்கலப் பொருட்கள் | மட்டக்களப்பு-களுவன்கேணி-மாவடிப்பற்று |
| சுய ஓவியப் படைப்புக்கள் | மட்டக்களப்பு-வாகரை-குஞ்சன்குளம் |
| உலக பழங்குடிகள் தினம் - வாகரை,குஞ்சன்குளம் | மட்டக்களப்பு-களுவன்கேணி-சேனைக்கண்டம் |
| வேடர் வழிபாட்டிடம்-05 | மட்டக்களப்பு - மாங்கேணி-கிரிமிச்சை |
| வழிபாட்டுச்சூழல் | மட்டக்களப்பு - மாங்கேணி-கிரிமிச்சை |
| வழிபாட்டுப் பொருட்கள் | மட்டக்களப்பு - மாங்கேணி-கிரிமிச்சை |
| வேடர் குடும்பம் ஒன்று | மட்டக்களப்பு - கிரான் |
| மாற்றமுறும் வேடர் வழிபாட்டிடம் - 01 | மட்டக்களப்பு - தளவாய் |
| மாற்றமுறும் வேடர் வழிபாட்டிடம் - 02 | மட்டக்களப்பு - கருவப்பங்கேணி |
| மாற்றமுறும் வேடர் வழிபாட்டிடம் - 03 | மட்டக்களப்பு - புளியடிமடு |

| தலைப்பு | இடம் |
|---|---|
| சுயம் மாறா வேடர் சடங்கு மையம் | மட்டக்களப்பு - களுவன்கேணி - சேனைக்கண்டம் |
| வேடர் வழிபாட்டிடம்-6 - ஆயத்த வேலைகள் | மட்டக்களப்பு - களுவன்கேணி - சேனைக்கண்டம் |
| வேடர் வழிபாட்டிடம்-6 - சடங்கின் புழங்கு பொருட்கள் | திருகோணமலை - வெருகல் - கல்லடி-வாழைத்தோட்டம் |
| மாற்றப்பட்ட வேடர் வழிபாட்டு மையம்-<br>பகுதி -1 ஆரம்ப கால வழிபாட்டு மையவிடம் | திருகோணமலை - வெருகல் - கல்லடி |
| மாற்றப்பட்ட வேடர் வழிபாட்டு மையம்-<br>பகுதி -2 தற்கால வழிபாட்டு மையவிடம் | திருகோணமலை - வெருகல் - வாழைத்தோட்டம் |
| சுயம் மாறா வேடர் சடங்கு மையம் -2 - வழிபாட்டுப் புறச்சூழல். | திருகோணமலை - வெருகல் - வாழைத்தோட்டம் |
| சுயம் மாறா வேடர் சடங்கு மையம் -2 - பாய்மரத்தின் குலக்குறியியம். | திருகோணமலை - வெருகல் - வாழைத்தோட்டம் |
| சுயம் மாறா வேடர் சடங்கு மையம் -2 - தொல்வழிபாட்டு பந்தல் அமைப்பு எச்சங்கள். | திருகோணமலை - வெருகல் - |

| தலைப்பு | இடம் |
|---|---|
| | வாழைத்தோட்டம் |
| வேடர் வழிபாட்டிடம் -இலங்கைத்துறை முகத்துவாரம் | திருகோணமலை - வெருகல் - இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part - 1- கடல் சார் வழிபாட்டு மையத்தின் புறச்சூழல். | திருகோணமலை - வெருகல் - இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part-02 - தற்கால சடங்கு மையத்தின் தீர்த்த ஊற்று | திருகோணமலை - வெருகல் - இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part-03 - பெரியசாமி சடங்கு மையத்தின் லிங்க அமைப்பு | திருகோணமலை - வெருகல் - இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part-04 - வழிபாட்டு மையத்தின் தரையமைப்பின் புறச்சூழல் | திருகோணமலை - வெருகல் - இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part- 05 - கப்பல் தெய்வத்தின் குலக்குறி அமைப்பு | திருகோணமலை - வெருகல் - இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part- 6 - இடைச்செருகியுள்ள திரிசூழ அமைப்பு | திருகோணமலை - வெருகல் - |

| தலைப்பு | இடம் |
|---|---|
| | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part-07 - ஆண் தெய்வ பந்தல் அமைப்புக்கள் | திருகோணமலை - வெருகல் - இலங்கைத்துறை முகத்துவாரம் |
| part-08 - பெண்தெய்வ பந்தல் அமைப்பு. | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| பகுதி - 1 -கப்பல் தெய்வ குலக்குறி அடையாளம் | திருகோணமலை - வெருகல் - சூரநகர் |
| பகுதி -2 - தற்போதைய வழிபாட்டு மையமும், அதன் நவீனப்படுத்தல் அம்சங்களும். | திருகோணமலை - வெருகல் - சூரநகர் |
| பகுதி-3 - இடைச்செருகியுள்ள தமிழர் கிராமிய வழிபாட்டம்சங்கள் | திருகோணமலை - வெருகல் - சூரநகர் |
| பகுதி - 4 - தற்போதைய பந்தல்களின் நவீன வடிவங்கள் | திருகோணமலை - வெருகல் - சூரநகர் |
| பகுதி - 5 - ஆரம்ப கால வழிபாட்டு பந்தல் அமைப்புக்கள் | சூரநகர் |
| வேடர் வழிபாட்டிடம் - குரங்கு மூலை | மட்டக்களப்பு - குரங்குமூலை |
| பகுதி -1 - ஆரம்ப கால குலக்குறி அடையாளங்கள். | மட்டக்களப்பு - குரங்குமூலை |
| பகுதி - 2 - வழிபாட்டு மையத்தின் பிரதான கப்புறாளை. | மட்டக்களப்பு - |

| தலைப்பு | இடம் |
| --- | --- |
| | குரங்குமூலை |
| பகுதி - 3 - வனப்பகுதியுடன் அண்டிய புறச்சூழல். | மட்டக்களப்பு - குரங்குமூலை |
| பகுதி - 4 - இடைச்செருகியுள்ள வழிபாட்டுக்கூறுகள். | மட்டக்களப்பு - குரங்குமூலை |
| பகுதி - 5 - இயற்கையுடன் ஒத்த வணக்கமுறைகள். | மட்டக்களப்பு - குரங்குமூலை |
| பகுதி - 6 - வழிபாட்டு மையத்தின் உட்புறச்சூழல். | தங்கநகர் |
| வேடர் வழிபாட்டிடம் - தங்கநகர் | திருகோணமலை - சேருவில - தங்கநகர் |
| part - 01 - ஆலயப்புறச்சூழல் | திருகோணமலை - சேருவில - தங்கநகர் |
| part-02 - கிராமிய வழிபாட்டுடன் இணைந்த உட்கட்டமைப்பு | திருகோணமலை - சேருவில - தங்கநகர் |
| part-03 - தமிழர் வழிபாட்டுடன் இணைந்த வழிபாட்டு எச்சங்கள் | திருகோணமலை - சேருவில - தங்கநகர் |
| part-04 - திரிசூல அமைப்பு | திருகோணமலை - சேருவில - தங்கநகர் |
| part-5 - நவீன வழிபாட்டுப் போக்குகளுடன் இணைந்த கட்டிட அமைப்பு | தங்கநகர் |
| வேடர் வழிபாட்டிடம் - RV-4, சேருவில | திருகோணமலை - RV-4, சேருவில |

| தலைப்பு | இடம் |
|---|---|
| பகுதி - 1 - வழிபாட்டுச் சூழல் | திருகோணமலை - RV-4, சேருவில |
| பகுதி - 2- திரி சூல அமைப்புக்கள் | திருகோணமலை - RV-4, சேருவில |
| பகுதி - 3 - இடைச்செருகியுள்ள வழிபாட்டம்சங்கள் | |
| வேடர் வழிபாட்டிடம் - பெரிய தெய்வம் - பால்ச்சேனை | பால்ச்சேனை, கதிரவெளி, மட்டக்களப்பு |
| நவீனப் போக்குடன் அமைந்த வழிபாட்டு வடிவங்கள் | பால்ச்சேனை, கதிரவெளி, மட்டக்களப்பு |
| வழிபாட்டுக்கூறுகள் | பால்ச்சேனை, கதிரவெளி, மட்டக்களப்பு |
| வழிபாட்டுப்புறச்சூழல். | மட்டக்களப்பு |
| வேடர் வழிபாட்டிடம் - சேனை வையிரவர் - வட்டவன் | வட்டவன் - வெருகல் - திருகோணமலை |
| பலவகை திரிசூல அமைப்புக்கள் | வட்டவன் - வெருகல் - திருகோணமலை |
| வழிபாட்டு உட்சூழல் | மட்டக்களப்பு |
| வழிபாட்டுப் புறச்சூழல் | சந்தோசபுரம் - மூதூர் - திருகோணமலை |
| சந்தோசபுரம் - கலந்துரையாடல் | மட்டக்களப்பு |

| தலைப்பு | இடம் |
|---|---|
| வேடர் வழிபாட்டிடம் - செண்பகநாச்சி - ஈச்சிலம்பற்று | ஈச்சிலம்பற்று, வெருகல், திருகோணமலை |
| ஆரம்ப கால எச்சங்கள் | ஈச்சிலம்பற்று, வெருகல், திருகோணமலை |
| மாற்றப்பட்ட நவீன கட்டிட அமைப்பு | ஈச்சிலம்பற்று, வெருகல், திருகோணமலை |
| வழிபாட்டு உட்சூழல் | ஈச்சிலம்பற்று, வெருகல், திருகோணமலை |
| வழிபாட்டு புறச்சூழல் | மட்டக்களப்பு |

**5.**குறுங்கால ஆவணகம்

பழங்குடி சமூகத்தினர் சார்ந்த அறிக்கைகள், மடல்கள் என்பவை இக்குறுங்கால ஆவணவகைக்குள் உள்ளடக்கப்படுகின்றன. இவை பழங்குடி மக்களது காணிப்பிணக்குகள் , ஆதிவாசிகளின் உரிமைகள் அவர்களது நலன்புரி அமைப்புக்களுடன் தொடர்புபட்டவையாக காணப்படுகின்றன.

| குறுங்கால ஆவணகம் | எண்ணிக்கை |
|---|---|
| கடிதம் | 16 |
| அறிக்கை | 3 |
| அழைப்பிதழ் | 1 |

குறுங்கால ஆவணகம்

**5.1** குறுங்கால ஆவணங்கள் தொடர்பான விளக்கப்பட்டியல்

| வகை | குறிப்பு |
|---|---|
| கடிதம் | மாவட்ட செயலகத்தினால் மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பபட்டது. |
| கடிதம் | மூதூர் பிரதேச செயலகத்தால் நல்லூர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு அனுப்பப்பட்டது. |
| கடிதம் | குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பினரால் பூர்வ குடிமக்களுக்கான உதவி கோரல். |
| கடிதம் | குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பினரால் மூதூர் நீர்பாசன வடிகால் அமைப்பு இணைப்பாளருக்கு அனுப்பப்பட்டது. |
| கடிதம் | குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பினரால் கடற்றொழில் அமைச்சருக்கு அனுப்பப்பட்டது. |
| கடிதம் | குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பினரால் மூதூர் பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பட்டது. |
| கடிதம் | குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பினரால் மூதூர் பிரதேச செயளாலருக்கு அனுப்பப்பட்ட்து. |
| கடிதம் | காணி விசாரனை தொடர்பான அழைப்பு- மூதூர் பிரதேச செயலகம் |
| கடிதம் | குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பினருக்கு தோப்பூர் கமநல சேவைகள் நிலையத்தால் அனுப்பப்பட்டது. |
| கடிதம் | குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பினரால் தோப்பூர் கமநல அபிவிருத்தி அலுவலருக்கு அனுப்பட்டது |
| அழைப்பிதல் | பழங்குடி மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பான கூட்டத்திற்கு மூதூர் பிரதேச செயலகத்தால் விடப்பட்ட அழைப்பு. |
| கடிதம் | பழங்குடி மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பாக மாவட்ட செயலகத்தினால் , பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டது |
| கடிதம் | காணிப்பிணக்கு தொடர்பாக மூதூர் பிரதேச செயலகம் |
| கடிதம் | மூதூர் பிரதேச செயலகத்தினால் காணி எல்லை நிர்ணயம் தொடர்பாக மூதூர் கிராம சேவகர்களுக்கு அனுப்பப்பட்டது. |

| | |
|---|---|
| கடிதம் | தோப்பூர் கமநல சேவை நிலையத்தினரால் உல்லைக்குளம் விவசாய சம்மேளனத்திற்கு அனுப்பப்பட்டது. |
| கடிதம் | சந்தனவெட்டை கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினால் குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பிற்கு அனுப்பப்பட்டது |
| அறிக்கை | மாற்றுக் கொள்கைகளுகான நிலையத்தின் இலங்கை ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல். தொடர்பான கொள்கைத்தொகுப்பு. |
| அறிக்கை | வெருகல் பிரதேச சபையில் பழங்குடி மக்கள் தொடர்பான அமைப்பின் கூட்டறிக்கை. |
| அறிக்கை | பழங்குடிச்சிறார்களுக்குத் தரமான கல்வியை அளித்தல். |

குறுங்கால ஆவணகம்

**6.** ஆவணகம்

இச்செயற்றிட்டத்தின் கீழ் பிரதானமாக கவிதை, கட்டுரை, பாடலாக்கம், சிறிகதை மற்றும் நாடகம் , கூத்து என பழங்குடியின சமூகத்திலிருந்து கல்வி மூலம் தம்மை உயர்த்திக்கொண்ட ஆளுமைகளது ஆக்கங்கள் உள்ளடங்குகின்றன.

| குறுங்கால ஆவணகம் | எண்ணிக்கை |
|---|---|
| கட்டுரை | 44 |
| கவிதை | 12 |
| கூத்து | 1 |
| சிறுகதை | 5 |
| நாடகம் | 5 |
| பாடலாக்கம் | 2 |
| ஆய்வுக்கையேடு | 5 |

[ஆவணகம்](#)

### 7. வலைப்பூக்கள்

பல்வேறு வலைத்தளங்களில் பழங்குடியினர் சார்ந்த கட்டுரைகள் , ஆக்கங்கள், இதழ்கள் என்பன பிரசுரிக்கப்படுகின்றன. அவ்வாறு பிரசுரிக்கப்படும் விடயங்களை வலைப்பூக்கள் எனும் வகைப்பாட்டினும் இச்செயற்றிட்டத்தின் மூலம் ஆவணப்படுத்தியுள்ளோம்.

| வலைபூக்கள் | எண்ணிக்கை |
|---|---|
| பழங்குடியினர் சார் ஏனைய வலைத்தள ஆக்கங்கள் | 136 |

[வலைப்பூக்கள்](#)

### 8. நிகழ்வுகள்

பழங்குடி மக்களின் சடங்கு நிகழ்த்துகைகளும் இச்செயற்றிட்டத்தின் கீழ் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

| பிரதான நிகழ்வு | துணை நிகழ்வுகள் |
|---|---|
| களுவன்கேணி- வேட்டுவச் சடங்கு முதலாம் நாள் நிகழ்வு | மடைப்பெட்டு எடுத்தல் , நெல்லுக்குற்றுதல் |
| களுவன்கேணி- வேட்டுவச் சடங்கு இரண்டாம் நாள் நிகழ்வு | பாய்மரம் வெட்டி வருதல் |
| களுவன்கேணி- வேட்டுவச் சடங்கு மூன்றாம் நாள் நிகழ்வு | தேவாதிகள் வாக்குச்சொல்லல் நேர்த்திக்கடன்களைக் கையளித்தல். |
| மீனாட்சிப்பத்தை- வேட்டுவச் சடங்கு | |
| குவேனி பழங்குடி அமைப்பு | நல்லிணக்க |

| | |
|---|---|
| | ஆணைக்குழுவிற்கு இடையிலான கலந்துரையாடல் |

## செயற்றிட்டம் சார்ந்த சவால்கள்

- செயற்றிட்டம் சார்ந்து ஆவணப்படுத்தப்படும் ஆளுமைகள் பழங்குடி சமூகம் சார்ந்தவர்கள் ஆவர். இவர்களில் மிகச் சிலரே கல்வியறிவினை பெற்றவர்களாக காணப்படுகின்றனர். அந்த வகையில் எமது செயற்றிட்ட நோக்கினை அவர்களுக்கு புரிய வைப்பது சவாலாக காணப்பட்டது.
- களச்செயற்பாடுகளை திட்டமிட்ட வகையில் செய்து முடித்தல் மிகக்கடினமாக இருந்தது. காரணம் ஆவணப்படுத்தப் பட வேண்டிய நபர்களில் வெகுசிலரே தொலைத்தொடர்பு சாதன வசதிகளை கொண்டோராக காணப்படுகின்றனர். ஏனையோர் இவ்வசதிகள் அற்றோராக காணப்பட்டதால் முன்கூட்டிய ஆயத்தங்களை மேற்கொண்டு களப்பணிகளை தொடர்வது சவாலாக அமைந்தது.
- நவீன கால சிந்தனைப்போக்கின் தாக்கம் காரணமாக பழங்குடியினர் சமூக மக்களில் பெரும்பாலானோர் தங்களது உண்மையான அடையாளத்தை வெளிக்காட்டுவதில் விருப்பம் குறைதவர்களாகவே உள்ளனர் . இப்போக்கின் காரணமாக செயற்றிட்ட செயற்பாடுகளுக்களை முன்னெடுப்பதர்கான வேகத்தில் தடைகள் ஏற்பட்டன. மேலும் தமிழ் சமூகத்துடன் வேடுவ சமூக மக்கள் ஒன்றி வாழ்வதால் சரியான நபர்களை அடையாளம் காணுவதில் சிக்கல் காணப்பட்டது.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- ஆவணப்படுத்தலுக்கு உள்வாங்கப்படுபவர்களில் பெருபாலானவர்கள் (ஆண், பெண்) வேடுவ மதகுருக்களாகக் காணப்படுவதனால், வாய்மொழி வரலாறுகளைப் பதிவு செய்யும் போது அதிமானுட நிலைக்குச் சென்று திரும்புவர். அதன் போது அன்றைய உரையாடலுக்கான நேரம்

அதிகரிக்கப்பட வேண்டியதாக இருக்கும். ஆகவே அதை கவனத்தில் கொண்டு அடைவு மட்டத்தின் இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும்.

- ஆளுமைகளை அடையாளங்காண்பதில் பழங்குடி இன முதுசம், கப்புறாளைமாரின் உதவியினை நாடி அவர்கள் மூலமாக சமூகம் சார் நபர்களின் அறிமுகத்தை பெறும் போது ஆளுமைகளை அடையாளம் காண்பதில் உள்ள சிக்கல்களை நீக்கலாம்.
- செயற்றிட்ட திட்டமிடலை பிரதேச அடிப்படையில் திட்டமிடல். இதன் மூலம் முன்னமே அப்பிரதேசம் மற்றூம் அப்பிரதேசம் சார் மக்களை பற்றிய பின்னணி அறிவினை பெற்றுக்கொள்வதன் மூலம் கள ஆய்வுகளை மேற்கொள்ளும் போது குறித்த செயற்றிட்ட வெளியீடு கிடைக்காவிட்டாலும் அதற்கான மாற்றுத்திட்டத்தினை வகுத்து வினைத்திறனான அடைவுகளை பெற முடியும்.

## இச்செயற்றிட்டம் சார்ந்து அடையாளம் காணப்பட்ட, முன்னெடுக்கக்கூடிய ஏனைய அரிய ஆவணச்செயற்பாடுகள்

1. வேடர் சமூகத்தில் காணப்படும் ஆளுமைகளின் தனிப்பட்ட திறன்களான எழுத்துத்திறன், கலையாக்கத்திறன் முதலான விடயங்களை ஆவணப்படுத்தல்
2. வேடர் சமூகத்தினரின் பிரதான தொழில் நடைமுறையான தேனெடுத்தலை ஒரு தனித்த ஆவணமாகப் பதிவுசெய்தல்.
3. வேடர் சமூத்தினரிடம் தனித்துவமாகக் காணப்படும் பெண் தெய்வ வழிபாடு மற்றும் வேடர் சமூகத்தில் பெண்களின் நிலை முதலான விடயங்களை மையமாகக் கொண்ட ஒரு செயற்றிட்டத்தினை முன்னெடுத்தல்.
4. கரையோர வேடர்களிடம் காணப்படுகின்ற இசைமரபு சார்ந்த தகவல் மற்றும் அது சார் விடயங்களை ஆவணப்படுத்தல்.
5. கிழக்கு மாகாணத்தைத் தாண்டியும் திம்புலாகல,வவுனியா, முல்லைத்தீவு ஆகிய வெளி மாவட்டங்களில் காணப்படும் தமிழ் பேசும் வேடர் சமூகங்கள் தொடர்பான செயற்றிட்டத்தை முன்னெடுத்தல்.

## செயற்றிட்டத்திற்கான பின்னிணைப்பு

பழங்குடியினர் ஆவணகம்